உ
சிவகுகமயம்.
திருச்சிற்றம்பலம்.

பழநி ஆண்டவர்

ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தான வெளியீடு.

1944) தாருண, ஆனிக்கிருத்திகை மலர். (ஜூன்

பழநித்திருப்புகழ்.

கொந்துத் தருகுழ லிருளோ புயலோ
விந்தைத் தருநுதல் சிலையோ பிறையோ
கொஞ்சிப் பயில்மொழி அமுதோ கனியோ
விழிவேலோ-
கொங்கைக் குடமிரு கரியோ கிரியோ
வஞ்சிக் கொடியிடை துடியோ பிடியோ
கொங்குற் றுயரல்கு லரவோ ரதமோ எனுமாதர்;
திந்தித் திமிதிமி திமிதா திமிதோ
தந்தித் திரிகிட கிடதா எனவே
சிந்திப் படிபயில் நடமா டியபா விகள்பாலே-
சிந்தைத் தயவுகள் புரிவே னுனையே
வந்தித் தருள்தரு மிருசே வடியே
சிந்தித் திடமிகு மறையா கியசி ரருள்வாயே;
வெந்திப் புடன்வரு மவுணே சனையே
துண்டித் திடுமொரு கதிர்வே லுடையாய்
வென்றிக் கொருமலை யெனவாழ் மலையே தவவாழ்வே-
விஞ்சைக் குடையவர் தொழுவே வருவாய்
கஞ்சத் தயனுட னமரே சனுமே
விந்தைப் பணிவிடை புரிபோ தவர்மே லருள்கூர்வாய்,
தொந்திக் கணபதி மகிழ்சோ தரனே
செங்கட் கருமுகில் மருகா குகனே
சொந்தக் குறமகள் கணவா திறல்சேர் கதிர்காமா-
சொம்பிற் பலவள முதிர்சோ லைகள்சூழ்
இஞ்சித் திருமதிள் புடைசூ ழருள்சேர்
துங்கப் பழநியில் முருகா இமையோர் பெருமாளே!

பொழிப்புரை.

(ஞானந்தானுருவாகிய நாயகனோடு) மிகுந்த சினத்துடன் எதிர்த்து (வருவான் போன்று) வந்த அவுணர்கள் தலைவனாகிய சூரபன்மனை, இருகூறுகளாகப் பிளந்த ஒப்புயர்வு செப்பரிய பேரொளிவீசும் வேலாயுதத்தை யுடையவனே! 'யாரையும் எவற்றையும் வெற்றிகொள்வதற்கு ஒரு (உதாரணமாக) எடுத்துக் காட்டாவிளங்கும் பெரியோனே! 'தஞ்சமாகிய அருந்தவம் புரிகின்றவர்களுக்கு வாய்த்ததொருபெருவாழ்வே! "ஞானத்துக்குத்தலைவன்" என்று எல்லா நூல்களாலும் போற்றப்படும் சிவபெருமானால் வணங்கப்பெற்றவனே! தாமரை மலரின்மீது வீற்றிருந்த பிரமதேவனும், தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரனும் கண்டோர் மகிழும் வண்ணம் மிகுந்த மெய்த்தொண்டு செய்ய அது கண்டு அவர்களுக்கு மிக்க பேரருளை வழங்கியவனே! எண்ணில்லாத அண்டங்களையெல்லாம் தனது வயிற்றிலே தரித்தமையால் மிகப்பெருத்துள்ளவயிற்றையுடைய விநாயகப்பெருமான் மகிழும்படியான இனிய துணைவரே! செந்தாமரைபோன்ற திருக்கண்களையும் மேகத்தைப் போன்ற திருமேனியையுமுடைய திருமாலின் சகோதரியின் புதல்வனே (மெய்யடியார்களின்) எல்லா உயிர்களின் நெஞ்சத்தாமரையில் நீங்காது எழுந்தருளி இருப்பவனே! திருமாலின் அவதாரமான சிவமுனிவன் மகளாரும், மாமன் புதல்வியாரும் ஆதலால் உரிமையுடையவளுமான வள்ளிநாயகியாரின் மணாளரே! வலிமை பொருந்தியவராய், கதிர்காமம் என்னுந் திருப்பதியில் எழுந்தருளி இருப்பவனே! சிறிதும் குறைவில்லாததும், பலவளங்கள் மிகுந்துள்ளதுமான சோலைகள் செறியப் பெற்றதும் வாவிகளும் அழகிய மதில்களும் சூழப்பெற்றதும், தேவரீரது திருவருள் எளிதிலே வாய்த்ததற்கு ஏற்ற எல்லாத்தவ நலன்களும் பொருந்தி இருப்பதும், எல்லாத் திருத்தலங்கட்கும் மேலாகச்சிறந்து விளங்குவதுமான **பழநியம்பதி** என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானே! தேவர்களுடைய தலைவனே! மிக நெருங்கி வளர்ந்துள்ள கூந்தலானது, மிகப்பெரிய காரிருளோ! பெருமழையைப் பொழியவரும் மேகமோ! காண்பவர் மனதில் ஆச்சரியத்தை விளைவிக்கும் நுதலா

இறைவி, இறைவன் திருமண விழாவின் உண்மைப் பொருள்

இறைவன் தன்மை

சைவ சித்தாந்த சரபம், சிவத்திரு. ஈசான சிவாசாரியர்

முதல்வன் பசுபாசங்களோடு கலந்துநின்று அவற்றை நடத்தும் முறைமை

"உலகெலா மாகிவேறாயுட னுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமல னாகி நின்றன னீங்கா தெங்கும்."

இறைவன், பேராற்றலும், பெருங்கருணையு முடையவர். பேராற்றலுக்குச் சிவமென்றும், பெருங்

னது வளைந்த வில்லோ? பிறைச்சந்திரனோ? கொஞ்சிக் கொஞ்சிப்பேசும் வார்த்தையானது அமுதமோ அல்லது பழமோ? விழியானது வேலோ? குடத்தைப்போன்ற தனபாரங்கள் இரண்டும் மரவயிரங்களோ, அல்லது மலைகளோ? வஞ்சிக்கொடிபோன்ற மெல்லிய இடையானது உடுக்கையோ, கைப்பிடியோ? மதநீரினால் உயர்ந்துள்ள அல்குலானது பாம்பின் படமோ, அல்லது தேர்த்தட்டோ? என்று மாதர் உறுப்புக்கள் ஒவ்வொன்றனையும் இவ்வாறு உவமித்து எண்ணி எண்ணி, "திந்தித்திமி திமி திமிதா திமிதோ தந்தித்திரிகிட கிடதா" என்று தாளங்களுக்கேற்ப அடிவைத்து நடனஞ் செய்கின்ற பெண்களிடத்திலேயே சிந்தையை வைத்து அவர்களுக்கு வேண்டியதைக் குறிப்பறிந்து கொடுத்தலிலேயே தயவுடையவனும் (அவர்களது தயவையே விரும்புகிறவனும்) ஆன அடியேன் (அவர்கள்மேல் உண்டாம் ஆசையையும் அவர்கள் குறை முடித்ததற்கு வேண்டப்படும் மண்ணாசை பொன்னாசை என்ற ஏனைய ஆசைகளையும் ஒருசேர ஒழிக்கும்) தேவரீரையே வந்தித்து வழிபட, அதனால் அருளைப்பொழிகின்ற தேவரீரது திருவருட் குணங்களையே சிந்திக்கும் வண்ணம் மிகமேலாகிய இரகசியமான 'சொல்' 'ஒரு வார்த்தை' எனப்படும் பிரணவப்பொருளை அடியேனுக்கு உபதேசித்தருள்வீராக; என்பதாம்,

கருணைக்குச் சத்தி என்றும் பெயர்; அவரது பேராற்றல் மக்களுடைய அறிவினாலே வரையறுக்கப்படாதது; எல்லை இல்லாதது; வாக்காலுமிக்க மனத்தாலும் உணர்வரியது. அவரது பெருங்கருணையோ எல்லாவுயிர்கள் மாட்டும் இயல்பாக எழுந்த பேரிரக்கமேயாகும். இந்தப் பெருங்கருணை, எல்லா உயிர்களிடத்திலும், பிரிவற நிற்பது. அதனை அறிந்த உயிர்களையும் அறியாத உயிர்களையும் அதுவே தாங்குகின்றது. எல்லா உயிர்களையும் விட்டு ஒருபோதும் அது பிரிந்திராது. எல்லாவுயிர்களும் அதனை இன்றி ஒருகணமும் நிலைத்திரா; இங்ஙனம், நிலையியற்பொருள் (அசரம்) இயங்கியற்பொருள் (சரம்) இவ்விரண்டினையும், கடந்து நிற்கும் சிவமும்,இவ்விரண்டிலுங் கலந்திருக்கும் சத்தியுமென அவரது ஆற்றலையும், கருணையையும், இங்ஙனம் போற்றி வணங்குவர் ஆன்றோர். இந்தச்சிவமுஞ்சத்தியும்-அக்கினியுஞ்சூடும்போல் தம்முட்பிரிவற நிற்பது. அந்தச்சத்தியே இறைவனுக்கு வடிவம். அந்தச்"சத்தி தன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்" எனவும், அந்தச்சத்தி அருளே ஆதலால், "அருளது சத்தியாகும் அரன்றனக்கருளையின்றித் தெருள்சிவமில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை, மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க்களிப்பன், கண்கட்கு, இருளினையொளியா லோட்டு மிரவியைப்போல ஈசன்" எனவும் சிவஞானசித்தியார்கூறும். "கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி" என்ற பெரியபுராணமுமிதனை வலியுறுத்தும். இந்தச் சிவமுஞ்சத்தியும்-நெருப்புஞ் சூடும் எங்ஙனம் பிரிந்திருக்கமுடியாதோ அங்ஙனமே பிரிந்திருக்கமுடியாதது.

''ஒருவனே யிராவ ணாதி பாவக முற்றுற் போலத்
தருவனிவ் வுருவ மெல்லாந் தன்மையுந் திரியானாகும்;
வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங்காழ்ப்பும்
இருமையும்போல மன்னிச்சிவத்தினோ டியைந்துநிற்கும்''

பிரியாதது ஒன்றுகூட வேண்டியதில்லையல்லவா? யாண்டும் நிறைந்து, என்றைக்கும் இன்பமயமாகி

யுள்ள பொருளுக்குப் பிரிவேது? அங்ஙனமாக, சிவன் சத்தியைவிட்டுப் பிரிந்தாரென்றும், சிவன் சத்தியை வந்து கூடினரென்றும் கூறுவதன் கருத்தென்னை யெனின் கூறுவாம்:—

"ஒன்றதா யிச்சாஞானக் கிரியை யென்றொகி மூன்றாகி,
நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கருணைச மாகும்,
நன்றெலா ஞான சத்தியானயந் தறிவனுதன்,
அன்றருட் கிரியை தன்னு லாக்குவனகிலமெல்லாம்"

ஐந்தொழிலின் இயல்பு.

சிவம் சத்தியோடு கூடுதலாவது, உலகந்தொழிற் படுமாறு, சிவபெருமான் சத்தியைத் தொழிற்படுத்து வதையேகுறிக்கும். அந்தச்சத்தி சங்கற்பத்தால் அதன் வழித்தான மாயை முதலியவைகள் காரியப்பாடு அடை தலும், அதனுல் உயிர்கள் உடம்பு முதலியவைகளோடு பொருந்தி இன்பதுன்ப அனுபவங்களிலே உயிர்கள் ஈடுபடுதல் பயனுகும். இதுதான் உலகத் தோற்ற மென்பது. "சிருஷ்டி" என்பதுவுமிதுவே. தோற்ற மென்பது இல்லாத ஒன்று புதிதாகத்தோன்றுவதல்ல; உள்ள காரணத்திலிருந்து ஒரு கருத்தாவினுலே, ஒரு காரியம் வெளிப்படுதலே தோற்றமாகும். சக்தி தனக்குக்கீழுள்ள மாயை முதலியவைகளை நோக்கி நின்று தொழிற்படுமாறு சங்கற்பித்தல் சிருஷ்டி எனப்படும்.

அங்ஙனம் உலகும் உயிர்களும் கலந்து நிற்க, அதனுல் உயிர் பக்குவமடையும்வரை தனக்குரிய கன்மத்துக்கேற்றபடி இன்பதுன்பங்களை அனுபவிக்கு மாறு நிறுத்தல் "திதி" எனப்படும்; காத்தல் என்பதும் இதுவே. அங்ஙனம், உயிர்கள் கன்மத்துக்கேற்ப பிறத்தல் இறத்தல்களைச் செய்தலினுல் வரும் இளைப் பை யொழித்தற் பொருட்டு, உயிர்களையும், உடம்பு மன முதலியவைகளையும் தனித்தனி பிரித்துவைப்பது சங்காரமாகும். சங்காரமென்பது - ஒரு பொருளை நாசஞ்செய்வதல்ல; காரியப்பாடான இந்த வுலகத்தை

அதன் காரணத்தில் ஒடுக்குதலேயாகும். இதனால், உலகம் தொழிற்பாடின்றி நிற்கும். அப்போது உயிர்களுக்கு இன்ப அனுபவமும் இல்லையாகும். அப்போதுயிர்களுக்கு இன்பத்தைக் கூட்டுவித்தற்பொருட்டு, சங்கற்ப மாத்திரத்தினாலே தொழிற்படுத்தும் சக்தியும், அங்ஙனம், நியமிக்குந் தொழிற்பாட்டினின்று, நீங்கிச் சிவத்தை நோக்கிநிற்கும்.

''அழிப்பிளைப் பாற்ற லாக்கமவ்வவர்கன்ம மெல்லாங்,
கழித்திட நுகரச் செய்கை காப்பது கன்ம வொப்பின்,
தெழித்திட மலங்களெல்லா மறைப்பருட்செய்கி தானும்,
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின ருளே யெல்லாம்''

x x x

''படைப்பாதித்தொழிலும் பத்தர்க்கருளும் பாவனையு
நூலும்,
இடப்பாக மாத ராளோடியைந்துயிர்க்கின்ப மென்றும்:
அடைப்பாள மதுவுமுத்தி யளித்திடும் யோகும் பாசந்:
துடைப்பானுந் தொழிலு மேனி தொடக்கானேற்சொல்
லொணாதே'

இறைவனே உயிர்களுக்கு இன்ப காரணர்.

அங்ஙனம் சத்தி-சிவத்தை நோக்கி நிற்கும்போது, சிவன் சத்தியைவிட்டுப் பிரிந்தாரென்றும், சிவன் - சத்தியை நோக்கி (உலகந்தொழிற்படுமாறு சங்கற்பித்துநிற்கும்போது) சத்தியோடு கூடினாரென்றும் புராணங்கள் கூறும். அங்ஙனம், புராணம் கூறும் உண்மைப்பொருள்களை வேத சிவாகமங்களின் வாயிலாகவும், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் வாயிலாகவும், பன்னிரு திருமுறைகள் வாயிலாகவும், உண்மையுணர்ந்து, அந்நெறிபிறழாமல், பிறர்க்குமுணர்த்தவல்ல ஆசான் முகமாகக்கேட்டு உண்மையுணர்ந்து உய்திபெறல் வேண்டும். அங்ஙனமல்லாதார்; மெய்ப்பொருள் காணாதுமயங்குவர். இறைவன் சிவ,சத்தி(ஆண்பெண்)வடிவமாக(அம்மையப்பராய்) நின்று உலகத்தைப்படைப்பர். உலகத்திலே காணப்படும் சராசரப்பொருள்கள்யாவும் ஆண்பெண்தன்மை

யுற்று நிற்கிறது. அந்தப் பொருள்களுக்குள்ள ஆண் தன்மையும் அமைதித்தன்மையும் எங்கே இருந்து வந்தது? அதற்கொரு மூலப்பொருள் வேண்டாமா? அது தான் இறைவனுக்குள்ள, "அருவம் - அருவுருவம் - உருவம்" என்னும் மூவகை வடிவங்களுள்ளே; உருவ வடிவமாகும். இறைவன் அருளினுலேவிளைந்த உருவ முடையனுகி; சராசரங்களெல்லாவற்றுள்ளுங் காணப் படும் ஆண் பெண் வடிவங்களுக்கு மூலமாகிநிற்பான். 'ஆண் பெண்ணுருவாகிச் சராசரங்கள்ஆனுன் சிவன்' என்று கந்தபுராணமும், 'ஆணெலாம் இறைவன்; பெண்ணெலாம்தேவி' என்றுவாயுசங்கிதையும்கூறும். அதனுல், உலகிலே அந்த வடிவங்கள் நிலைபெறும்.

"சத்தியுஞ் சிவமு மாய தன்மையில் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா வானும் பெண்ணு முயர்குண குணியுமாக
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீடலிங்கத்தி னியல்பு மோரார்"

உலகத்துக்கு மூலமான அந்தச் சிவசத்தி வடிவங்கள் தம்முள் கூடிநின்ருல், இந்த உலகத்துள்ள உயிர்கள் எல்லாம் அங்ஙனமே தத்தமக்குரிய ஆண் பெண் வடிவங்களோடு கூடிநின்று இன்பத்தைப் பொருந்தும். அங்ஙனமே எல்லாவுயிர்களுக்கும் உயிர்க்குயிராக விளங்கும் சிவசத்திகள் பிரிந்துநின்ருல், இந்த விரிந்த வுலகத்திலேவுள்ள, நிலையியற்பொருளும், இயங்கியற் பொருளுமாயுள்ள சராசரங்கள்யாவும், தத்தமக்குரிய ஆண் பெண் வடிவங்களின் கூட்டுறவின்றிப்பிரிந்து நிற்கும். "ஈருடல்முயங்கும் ஆர்வம்இன்றியே இருந்த, யார்க்குங் காரணன் சிவனே" என்று கந்தபுராணமும்,

"கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிட வேட்கைக்கு,
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மாருன்;
எண்ணிவேண் மதனையேவ வெரிவிழித் திமவான்பெற்ற;
பெண்ணினைப் புணர்ந்துயிர்க்குப் பேரின்ப மளித்த
தோரார்"

என்று சித்தியாரும் கூறும்.

முன்பு ஒரு காலத்திலே, திருக்கைலாயிலே கல்லாலவிருக்ஷத்தின் நிழலிலே சிவபெருமான் தெக்ஷிணுமூர்த்தியாய், உமாதேவியாரை விட்டுத்தனித்து, யோகம் செய்வார்போல் இருந்தபோது உயிர்களுக்கு இன்பத்தை ஊட்டும் மன்மதன் நின்றிடவும் எல்லாவுயிர்களும், தத்தமக்குரிய இன்பானுபவமின்றி, இருந்தன. அந்த மன்மதனை எரித்துச் சிவபெருமான், உலகமாதாவாகிய உமாதேவியாரைத் திருக்கலியாணஞ் செய்துகொண்டு, அந்த அம்மையாரோடு கூடி இருந்தபோது எல்லாவுயிர்களும் இன்புற்றிருந்தன; என்று, கந்தபுராணம் கூறுதல் பற்றித் தெளியப்படும்.

திருமணம் இன்னதென்பது.

திருமணம், விவாகம், கலியாணம் முதலியன ஒரு பொருளன. திருமணமாவது: ஒருயிரின் ஆண்மை, அமைதி, என்னும் இருபெருங் குணங்களின் மிகுதிப்பாடுகள் எடுத்த (ஒருயிரின்) ஈருடம்பை இல்வாழ்க்கை கடைபோகக் காத்தற்பொருட்டு கூட்டுவிப்பதாம்.

"ஆனந்த வெள்ளத்தழுந்தும் ஓராருயிர்
ஈருருக்கொண்டு ஆனந்த வெள்ளத்திடை
திளைத்தாலொக்கும்" — திருக்கோவையார்.

ஆண்மைக்கும் பெண்மைக்கும் தனித்தனி பிரிவற நிற்குங் கவர்ச்சித் தன்மையுண்டு. சிவமுஞ் சத்தியும் பொருளால் ஒன்றேயாயினும் ஆளுந் தன்மையினுலே கடந்து நிற்குந் தன்மையும், எல்லாப்பொருளையுங் காக்குந் தன்மையினுலே கலந்துநிற்குந் தன்மையும், எல்லாவுயிர்ப் பொருளும், உயிரில் பொருளும் ஜீவிக்கும் பொருட்டு அவற்றைச் செலுத்தும் தன்மையும், எல்லாப் பொருளுக்கும் தன்னை இன்றிப் பற்றுக்கோடு இல்லாதபடியினுலே அவைகளைத்தாங்குந்தன்மையும், உடையராதல்பற்றி, அந்தச் சிவபெருமானொருவரையே சிவமெனவும், சத்தி எனவும், தனித்தனி வழங்குதல் போலவும், அந்தச் சிவ பரம்பொருளொன்றே

உலகத்தைக்காரியப்படுத்தும் பொருட்டும், உலகத்தை உய்யக் கொண்டருளும் பொருட்டும், சிவமெனவும், சத்தி எனவும் நின்று இந்த விரிந்தஉலகத்தைப் படைத்தும், உயிர்களுக்கு, உடம்பு, மன முதலியவைகளை, மாயையிலிருந்து தோற்றுவித்தும், உயிர்களின் பக்குவத்துக்கேற்ப அவற்ருேடு இணைத்தும், பராசத்தியின் ஒரு கூறு, "திரோதான சத்தி" எனப்பெயர் பெற்று நின்று, மலம் மாயை, கன்மங்கள் முதலியவை தொழிற்படுமாறு செலுத்தி அதனுல் உயிர்களுக்குப் பாகத்தை வருவித்து, ஆன்மாக்களை, ஒப்பற்ற பரம்பொருளிடத்திலே கூட்டுவித்து,ஆன்மா சிவானுபவத்தை அனுபவிக்கும்போது, சிவமென்றும், சத்தி என்றும், வேறுபாடின்றி ஒன்றேயாய்க் காணப்படுமாறுபோலவும், மக்களும் இல்வாழ்க்கை, மேற்கொண்டு அன்பு பெருகப் பலவகையானப் பொதுச் சிறப்பறங்களையாற்றி, அதனுல் விளைந்த மெய்யுணர்விஞலே சரியை கிரியா யோகங்கள் முதலிய மெய்த்தவங்களைச்செய்து அதனுல் விளையும் இறைவனது, அடிஞானம் எனப்படும் அருண்ஞானம் வாயிலாக, இறைவனடி கூடுதற் பொருட்டு, ஆண்மைத்தன்மையும், அமைதித்தன்மையும் தனித் தனி சிறப்புற்று விளங்கும் ஆண் பெண் வடிவு பெற்று விளங்குவர் முடிவில் அடிமை என்ற ஒரு பெயர் பெற்று விளங்குவர்.

அங்ஙனம் ஒருயிரின் ஆண்மையும் அமைதியுமென்னும் இரண்டு தன்மைகளும் எடுத்த இரு உடம்பை, மனையறத்தை ஆற்றும்பொருட்டு இசைவிப்பது உலகத்திலே **திருமணம்** என்று வழங்கப்படும்.

ஆயினும், அங்ஙனம் ஆண் பெண் இசைவாகிய திருமணத்தினுலே எல்லாவுயிர்களும் பெறும்பேறு எய்தாமைக்குக்காரணம் செவ்வையாக மனையறத்தைப் போற்ருமையேயாகும். ஆயினும், ஒவ்வொருவருடைய வாழ்விலும் தங்கள் தங்கள் வினைக்கேற்பச் சிறிதுசிறிதாவது நலன் விளையாமலில்லை; அறிவினுலே மிகமுதிர்ந்த தக்கார்களுடைய வாழ்விலும் மனையறம்

முற்றுப்பெருமைக்குக் காரணம் வினைவலிமையே யாகும். அதனைக்கடந்து எல்லோரும் நினைந்தவாறே பலன் பெறுதற்கு வழி இறைவன் வழிபாடு; அது பற்றியே எல்லோருடைய கருத்தும் முற்றுப்பெறும். இதுபற்றியே "தனக்குவமையில்லாதான் தாள்சேர்ந் தார்க் கல்லான் மனக்கவலை மாற்றலரிது" என்ற திருக் குறளும் எழுந்தது. இறைவனை வழிபடாதார் வினை யினாலே செலுத்தப்பட்டு எண்ணில்லாத கற்பகாலம் முன்வினையை அநுபவிக்கும்போது நான்; என்னுடை யது; நான் செய்தேன்; பிறர்செய்தார்; நான் பிறரை வாழவைத்தேன்; என்னைப்பிறர் தாழவைத்தார் என்ற முனைப்பினாலே மேல் வினையேறுதலுமாக இங்ஙனம் அழியாதவினையினாலேபலபிறப் பிறப்புக்களில்சென்று வருந்தும் உயிர்கள் கதியடையவே இறைவன்வழிபாடு அமைந்தது. யாதினும் எவற்றினும் இறைவனே பரம காரணர்என்ற உணர்ச்சியினாலே வினையெல்லாமாயும்; அந்த உணர்ச்சியை யுண்டுபண்ண அமைந்தது கோயி லும், அங்கேயுள்ள திருவுருவங்களுமாகும். அங்கே செய்யும் வழிபாடும் அவரை நோக்கிச் செய்யும் அபிஷேகம் ஆராதனை திருவிழா முதலியனவும் அந்த இறைவன் நமக்குச் செய்த எண்ணில்லாதவுதவிகளை நாடி நாம் செய்யும் அன்பிற்கு எடுத்துக் காட்டாகித் திகழும்; அதுமட்டுமல்ல; இறைவனுடைய வடிவம் உலகத்திலே காணப்படும் எல்லா வடிவங்களுக்கும் (மூலம்)வேர்போன்றது. அதுபற்றியே(இறைவனது) வடிவம் (சிவலிங்கத்தை)"மூலலிங்கம்" என்றும்அவர் எழுந்தருளியிருக்கும் இடத்தை மூலஸ்தானமென வும் போற்றுகின்றோம். அங்கே செய்யும் வழிபாடு சராசரப் பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் பெருநலம் விளைப்பதாகும். மரத்தின் வேரிலே வார்த்த நீர் அதன் கிளைகளுக்காதல்போல இறைவனுக்குச் செய் யும் எல்லாவழிபாடும் எல்லாவுயிர்களுக்கும் ஆகு மென்று ஆகமங்கள் கூறுகின்றன; "சராசரங்கள் ஆனான் சிவன்" என்று கந்தபுராணமும் கூறும். சராசரப்பிரபஞ்சத்திலே இறைவன் கலந்து நின்ற

தன்மை பாண்டியமன்னன் கைப்பிரம்படியை இறைவன் ஏற்றருளியபோது எல்லாவுயிர்களும் அடிபட்டமையினலும், சிவபெருமான் திருக்கண்களை உமாதேவியார் புதைத்தபோது உலகமெல்லாம் இருண்மயமாகவிருந்த வரலாற்றினலும் உணரப்படும். அங்ஙனமே, இறைவனுக்கும் இறைவிக்கும் திருக்கோயிலிலே செய்யப்படும் திருமணவிழாவானது எல்லாவுயிர்களும் இன்ப வாழ்வு பெறுதற் பொருட்டேயாகும்.

மக்கள் திருமணம், குறித்த பெண், ஆண் நலன்பற்றியது; இறைவன் திருமணம் சராசரப்பிரபஞ்சங்களெல்லோருடைய நலன் கருதியது; மக்கள் திருமணம் காமத்தை முன்னகைக்கொண்டது; இறைவன் திருமணம் காமனை எரித்தபின்பு நிகழ்ந்தது; மக்கள் திருமணத்தினலே தாங்களே பயன் காண்பர்; இறைவனுக்குச்செய்யும் திருமணத்தினலே எல்லோருக்கும் மனையறம் சிறத்தலும் எல்லோரும் எல்லா நலன்களும்பெறுதலும்முடிவில் இறைவன் திருவடிப்பேறடைதலும் பயனும். அறிவுவடிவாகியசிவன் அருள்வடிவாகிய சத்தியைமணந்து கொள்வது உலகம்நடைபெறும் பொருட்டும் எல்லாவுலகமும் உயிர்களும் இன்பம் பெறும்பொருட்டேயாகும்; ஆண்டுகள் தோறும் சிவனுக்கும் சத்திக்கும் திருமணம் நடைபெற்றுலும் சராசரப் பிரபஞ்சங்களத்தனைக்கும் சிவசத்திகள் தாயுந்தந்தையுமாக விருப்பினும் சிவன் "பிரமசாரி" என்றும் அம்மை "கன்னி" என்றும் சிவஞான நூல்கள் கூறும். இதனல் இறைவன் திருக்கல்யாணமானது ஒத்தநலன் முதலியன வாய்க்கப்பெற்ற நன்மனையாளை மக்கள் விதிப்படிமணந்து இன்பவாழ்வுறுதற் பொருட்டுநடித்துக்காட்டும்எடுத்துக்காட்டென்பதும், எல்லாவுயிர்களுக்கும் இன்பம் தருதற்பொருட்டென்பதும் பின்வரும் திருவாக்குக்களால் உணரப்படும்.


"நங்காய் இதென்னதவம் நரம்போடெலும் பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ."

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

மண்டபத் திறப்பு விழா அழைப்பிதழ்.



பொள்ளாச்சி தாலூகா

பிலிச்சின்னம்பாளையம்

மிராசுதார் கண்ட்ராக்டர்

திரு. ப. கிருஷ்ணசாமி நாடார்

பழநி முருகன் அடியார்களுக்கு உதவிய

திருமண்டபம்.

26-4-1944.

பழநிமலை மண்டபத் திறப்பு விழாக்கள்.

ஆண்டவர் மலைமீதுள்ளபடிகளில் அன்பர்களின் வசதிக்காக பல பெரியார்கள் தங்கள் செலவில் பல மண்டபங்கள் கட்டுவதுப்பற்றி நமது பழநி ஆண்டவர் **1-6-1943** சுபானு வைகாசிக் கிருத்திகை மலரில் குறிப்பிட்டிருந்தோம். அவைகளுள் சென்னை திரு, இராவ் பகதூர் **C**, திருவேங்கட முதலியார் அவர்களது மண்டபம் **31-12-1943**ல் உயர்திரு முதலியாரவர்கள் அவர்கள் வாழ்க்கைத்துணை நலம் திருமதி யசோதையம்மையவர்கள் யாவரும் வந்திருந்து அம்மண்டபத்தின் புண்ணிய-வசனம் செய்து முருகனடியார்களுக்கு உவந்தளித்தனர்.

அதற்கடுத்து கோவை **Messrs Overseas Representations,** உரிமையாளரான பாலக்காடு, கிழக்கஞ்சேரி சுப்பராம அய்யர்குமாரர் திரு சு.கணபதி ஐயரவர்கள், **25-2-1944**ல் தாமும் தமது இல்லக்கிழத்தியார்-பெற்றோர்கள், நண்பர் திரு. **K**. ரங்கே கவுடர் அவர்களுடன் வந்திருந்து மண்டபத்தை முருகனுக்கும் முருகனடியார்களுக்கும் உரிமையாக்கினர்,

இன்னும் பொள்ளாச்சிதாலூகா, பிலிச்சிஜமீன்பாளையம் மிராசுதாரும் ஆப்காரி கண்ட்ராக்டருமாகிய திரு. ப. கிருஷ்ணசாமி நாடார் அவர்கள் நாளது தாருண சித்திரை **14**-ம் நாள் **26-4-44**வயன்று தமது குடும்பத்தார், தமருடன் வந்திருந்து ஆண்டவருக்கு விசேஷ சிறப்புக்கள் செய்தும் தமது மண்டபத்தை முருகனுக்கு உரிமையாக்கினார்கள்.

சமீபத்தில் நாளது **12-6-44**வயன்று சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் திவான்பகதூர் ஸ்ரீ **C. N** குப்புசாமி ஐயரவர்கள் தமது குடும்பத்தார்களும் வந்திருந்து ஆண்டவருக்கு காவடியெடுத்தும் ருத்ர ஜெபம் முதலிய சிறப்புக்கள் செய்தும், தமது மண்டபத்திற்கு வாஸ்து சாந்தி செய்தும் முருகன் திருவடிக்கு இம்மண்டபத்தை உரிமையாக்கினார்கள்.

இன்னும் கோவை, வழக்கறிஞர் திரு. **T. A** இராமலிங்கம் செட்டியார், பி,ஏ , பி,எல் , எம்.எல்.ஸி., அவர்களது மண்டபமும் கட்டி பூர்த்தியாகியுள்ளது. இப்பெருந்தகையாளர்களுக்கெல்லாம் நமது ஸ்ரீ ஞான தண்டாயுதபாணி சுவாமியின் தண்ணருள் என்றும் நிலவுவதாக.

பழநி ஆண்டவர்.

முருகனடியார்களின் தமிழ் விசேஷ வெளியீடு.

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான காரியாலயத்தினின்று மாதச் சிறப்புக்கள் தோறும் வெளிவருவது. தமிழ் மக்களின் தாய்மொழிப்பண்பையும் சமய உணர்ச்சியையும் பெருக்குவது. தமிழ் உலகத்தில் ஒவ்வொரு மக்கள் வீட்டிலும் உலவும் அரிய வெளியீடு.

தனிப்படி அஞ்சற்கூலி உள்பட அணா 0—4—9.

ஆண்டு வரி அஞ்சற்கூலி உள்பட ரூ. 2—0—0

PALNI: The Sacred Hill of Muruga. (in English)
by J.M. SomasundramPillai (with 25 illustrations in Art plates) Re. 1

திருக்கார்த்திகை மற்றும் சிறப்புக்களின்
வெளியீட்டுத் தொகுதி அ. 4

சைவசித்தாந்த விளக்கமும்,சிவாலய பூசாமகோற்ஸவ
தத்துவ விளக்கமும் அச்சில்

பழநித்திருத்தலவரலாறு அனேக படங்களுடன் அ. 12

ஷை சிறிய பதிப்பு படங்களுடன் அ. 6

மேற்குறித்தவை பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் காரியாலயங்களில் பெறலாம்.